[1979 மார்ச் 14

திரு. கு. ரமணி : நேற்றையதினமும் இது போல் தாங்கள் கேள்வி நேரத்தை முடித்தபோது, இன்னும் ஐந்து நிமிடங்கள், பத்து நிமிடங்கள் நீடித்து கேள்விகளை முடித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டோம். அவ்வாறு தாங்களும் அனுமதித்தீர்கள். முன்பும் இப்படிப்பட்ட வழக்கம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது போல் இன்றைய தினமும் சற்று கேள்வி நேரத்தை நீட்டித்து கேள்விகளை கேட்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பத்து கேள்விகள் இருக்கின்றன. இதையெல்லாம் முடிப்பதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். நேற்று இரண்டு மூன்று கேள்விகள் மட்டும் இருந்தது, ஆதலால் பத்து நிமிடத்தில் கேள்வி நேரத்தை முடித்துவிட்டோம். இன்று, நேற்றைக்கு ஒத்தி வைத்த கேள்விகள் 2, இன்னும் பாக்கியுள்ள கேள்விகள் 9, ஆக 11 கேள்விகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் முடிக்கவேண்டும் என்றால், இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். அதே நேரத்தில் ஆளும் கட்சித் தரப்பில் அதிகமான பேர்களை அழைக்கவில்லை என்றும் சொல்லுகிறார்கள். இந்த நிலையில் இன்னும் ஒரு மணி நேரம் வேண்டும் என்று கேட்டால், அது இயலாத காரியம்.

திரு. கு. ரமணி : நான் ஒரு மணி நேரம் நீடிக்கவேண்டும் என்று கேட்கவில்லை. பட்டியலிலுள்ள கேள்விகளை எல்லாம் முடித்தாக வேண்டும் என்று கேட்கவில்லை. ஐந்து நிமிடம் அல்லது பத்து நிமிடம் நீட்டித்தால், அதில் எவ்வளவு துணைக் கேள்விகள் கேட்கலாமோ அந்த அளவுக்கு துணைக்கேள்விகள் கேட்கட்டும். அதைச் செய்தால் போதும் என்று தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வி, இரண்டு கேள்வி என்றால் பத்து நிமிடம் நீடித்து நடத்தினால் கேள்விகள் முடிந்துவிடும். இருக்கின்ற கேள்விகளை எல்லாம் முடிக்க வேண்டும் என்றால், இன்னும் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும் அப்படி இதிலே ஒரு மணி நேரத்தை எடுத்துக்கொண்டால். மற்ற நிகழ்ச்சிகள் நின்று விடும். அதனால் தான் இத்துடன் கேள்விகளை நிறுத்திக் கொண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொண்டேன்.

(ஆ) உரிமை மீறல் அறிவிப்பு குறித்து.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி இன்னும் ஆராய்ந்து முடிவு எடுக்கவில்லை. அதைப்பற்றி இப்போது பேச முடியாது. அது நாளையோ மறு நாளோ எடுத்துக் கொள்ளலாம்.

1979 மார்ச் 14]

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு இந்தப் பிரச்னையைப்பற்றி பேசக் கூடாது.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், நான் ஒரு அவை உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நேற்று தந்து இருக்கிறீர்கள், அதை இன்றைக்கே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. அதற்கான விவரங்கள் தயாரான உடன் அதை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. க. சுப்பு : நான் ஏற்கனவே இதை கொடுத்து விட்டேன், நீங்கள் இன்று அதை என்னவென்றும் சொல்ல வில்லை. இப்படி நீங்கள் ஒருதலைப் பட்சமாக நடக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி பேசிக் கொண்டு இருந்தால் சுப்பு அவர்களை நான் பேச அனுமதிக்க முடியாது. அவர்கள் கொடுத்ததை நாளையோ மறுநாளோ எடுத்துக் கொள்கிறேன்.

(திரு. க. சுப்பு அவர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்ததின் பேரில் இன்னும் நான் முடிவு எடுக்கவில்லை.

திரு. க. சுப்பு : எல்லாவிஷயத்திலும் உடனே முடிவு எடுத்துவிடுகிறீர்கள். இதில் ஏன் இவ்வளவு தாமதம், இன்று இதை எடுத்தேயாகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி என்னை வலுக் கட்டாயமாக இன்றே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்ல முடியாது. நீங்கள் கொடுத்தது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இப்போது அதை எடுத்துக்கொள்ள முடியாது. தயவு செய்து உட்காருங்கள், இப்போது பேசுவதற்கு உங்களுக்கு நேரம் தரமுடியாது.

திரு. க. சுப்பு: என்னைப் பேச அனுமதித்தே ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்படி என்னை கட்டாயப்படுத்த முடியாது. இதற்கு எதிர்கட்சித் தலைவர்கள் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

(திரு. க. சுப்பு நின்று கொண்டிருந்தார்..)

திரு. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இது நாளைக்கு நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும் என்ற உறுதியையாவது கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. க. சுப்பு : நான் இது என்ன பிரச்னை என்றே இன்னும் சொல்லவில்லையே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் விதிகளை தெரிந்து இருக்கிறீர்கள். ஆகவே இதில் என்னை நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. க. சுப்பு : மேலும் மேலும் இதையே சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். என்னை பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆய்வுக் குழுவிலே முடிவெடுக்கப்பட்டது....

திரு. க. சுப்பு : அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை. ஆய்வுக் குழுவைப் பற்றி அக்கறை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்கள் சொந்தக் கருத்து.

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். உணர்ச்சிவசமாக இருக்கிறார். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று பிரதான எதிர்க் கட்சித் தலைவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்த உத்தர வாதத்தோடு அவர்கள் இதை விட்டுக் கொடுக்கலாம் என்றும், சபையின் நடவடிக்கைகள் தொடர அனுமதிப்பார் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

திரு. க. சுப்பு : உங்களுக்கு வேண்டியவர்கள் என்றால் சீக்கிரமாக உடனடியாக எடுத்துக் கொள்ளுகிறீர்கள். நான் கொடுத்துள்ள பிரச்னை என்னவென்று வாசிக்கக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சு. சுப்பு அவர்களுடைய பிரச்னையை நாளைக்கு எடுத்துக் கொள்ளுகிறேன். தயவுசெய்து உட்காருங்கள்.

1979 மார்ச் 14]

திரு க. சுப்பு : எந்த விதியிலே அப்படி சொல்லப்பட்டு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியிலேயும் சொல்லப்படவில்லை. ஆறுமுகம் அவர்கள்.

திரு சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய மேலான கவனத்திற்கு இதை ஒரு ஆலோசனையாகக் கூறுகிறேன். பல துறைகளைச் சேர்ந்த கேள்விகளுக்கு முறைப்படி பதில்கள் பெற முடியவில்லை. காரணம், பேரவைத் தலைவர் அவர்கள் அந்தப் பக்கத்திலே உள்ளவர்களைத் தான் அனுமதிக்கிறார். ஆகவே, நாளையிலிருந்து இந்தப் பக்கத்திலே உள்ளவர்களைக் கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும். இதைத் தூய நோக்கத்தோடு தான் சொல்கிறேன், தீய நோக்கத்தோடு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் என்ன உரிமைப் பிரச்னை கொடுத்தார்கள் என்பதைத் தான் சொல்ல விரும்புகிறார்கள். அதைச் சொல்ல விடுங்கள். பிரச்னையை நாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளில் அப்படி இல்லை நான் அனுமதித்தால் தான் உண்டு. சொல்ல வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. நாளை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : யார் மீது கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு எடுத்துக் கொள்வதாக உத்தரவாதம் தருகிறேன்.

திரு. க. சுப்பு :பல பிரச்சனைகளை நான் கொடுத்திருக்கிறேன் இது என்ன என்பதைச் சொல்லக் கூடாதா)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே ஒரு உரிமைப் பிரச்னையைக் கொடுத்துவிட்டு, உண்மைக்குப் புறம்பான முறையிலே பலவற்றைக் கொடுத்திருப்பதாகச் சொல்வதெல்லாம், இந்த அவையின் மரபை, மரியாதையை காப்பாற்றுவதாக இல்லை. எதிர்க் கட்சித் தலைவர்தான் இதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டும். தயாராக இருந்த பிரச்னையை எடுத்துக் கொண்டேன். இது தயாராக இல்லை. 4 பத்திரிகைகளை

நான் கேட்டிருந்தேன். 2, 3 பத்திரிகைகளையாவது கொண்டு வாருங்கள் என்று சொன்னேன். கொண்டு வராததால் அனுமதிக்க முடியவில்லை.

திரு. க. சுப்பு : அப்படி கொடுக்கவேண்டுமென்று ரூலிங்கைக் காட்டுங்கள். அனுமதிக்க முடியாது என்று தாங்கள் சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின் கீழ் அவை மீறல் பிரச்னையைக் கொடுத்துவிட்டு, நான் அனுமதிக்க முடியாது என்று சொல்ல முடியாது என்று சொல்லுகிறார்கள்? முன் வரிசையிலே உள்ளவர்கள் இதற்கு வழிகாட்டினால்தான் நல்லது. இப்படி கட்டுப்பாடு இல்லாத முறையில் நடந்து கொண்டால் எப்படி நான் அவையை நடத்த முடியும். நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நீங்கள் அசெம்பிளி நடத்துகிறீர்களா? அல்லது மீன் மார்க்கெட் நடத்துகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் போன்றவர்கள் இருந்தால் மீன் மார்க்கெட் தான் நடக்கும். உங்கள் தலைவர் சொன்னதற்கே கட்டுப்பட முடியாது என்று சுப்பு சொன்னால்' என்ன அர்த்தம்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்னை. சிம்கோவைப் பற்றிக் கொடுத்த தாகத் தெரிகிறது. நாளைக்கு எடுத்துக் கொண்டால் சரியாக இருக்கும்.

திரு. க. சுப்பு : நான் கொடுத்திருப்பது சிம்கோ பிரச்னையைப் பற்றி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பிரிவிலெஜ் மேட்டரைப் பற்றியது. நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், உறுப்பினர் சுப்பு அவர்களும் நின்றுகொண்டு பேசுகிறார். இரண்டு பேர்களும் எப்படிப் பேசலாம்?

[முற்பகல் 10.10]

திரு. க. சுப்பு : எனக்கு மைக் போடவில்லை, அவருக்கு மட்டும் எப்படி மைக் போட்டீர்கள்?

1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அவருக்கு அனுமதி கொடுத்தேன்.

திரு. க சுப்பு : என்ன உரிமைப் பிரச்சினை? யார் மேல் என்று சொல்ல வேண்டாமா: என்ன பயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லக்கூடாது. நான் அனுமதித்தாலொழிய சொல்லக்கூடாது.

திரு. க. சுப்பு : நான் சொல்லாமல் விட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின்கீழ் அவர் சொல்ல முடியும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். உங்களுடைய அனுமதியின் பேரில்தான் அது இந்த அவைக்கு வரமுடியும். நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். ஏன் உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளவில்லை என்று வற்புறுத்த யாருக்கும் உரிமை கிடையாது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : ஆயிரம் பேர் என்ன சொன்னாலும் உரிமைப் பிரச்சினை என்ன என்று நான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதித்தாலொழிய நீங்கள் சொல்ல முடியாது. இந்த நிலை பற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும்.

திரு. க. சுப்பு : சபாநாயகர் சபாநாயகராக இல்லை. நான் உரிமைப் பிரச்சினை என்ன என்று சொல்லாமல் விடமாட்டேன். எங்கள் மேல் உரிமைப் பிரச்சினை கொடுத்தால் உடனே எடுத்துக் கொள்வது, அடுத்தவர்கள் மீது கொடுத்தால் எடுத்துக் கொள்வதில்லை.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) சிதம்பரத்தில் திரு. லத்தீப் அவர்களை சிலர் தாக்க முயன்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவை உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் 10–3–79 அன்று இரவு 7-20 மணிக்குச் சிதம்பரம் நகரைக் கடந்து கொண்டிருந்தபோது சில காலிகளும், போலீசாரும் தடுத்து நிறுத்தித் தாக்க முயன்றதன்